செய்தி வெளியீடு எண் :963 நாள் : 19.05.20

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு தொழில் வணிகத் துறையால் செயல்படுத்தப்படும் நீட்ஸ் திட்டத்தில் முதலீட்டு மானியம் பெற்ற தொழிற்சாலைகளில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

-----

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் (18.5.2023) அன்று திருமழிசை, காக்களூர், அம்பத்தூர் தொழிற்பேட்டைகளை ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு தொழில் வணிகத் துறையின் துறையால் செயல்படுத்தப்படும் சுய வேலைவாய்பு திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் முதலீட்டு மானியங்கள் பெற்ற தொழிற்சாலைகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் தலைமையில் அரசு பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் 4 சுயவேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ், ரூ.656 கோடியே 27 லட்சம் மானியத்துடன், ரூ.1,817 கோடி வங்கிக் கடன் உதவி வழங்கி 22,425 இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். இதில் ஒரு திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தில் (NEEDS) கடந்த ஒரு ஆண்டில் மட்டும் நிர்ணயிக்கப்பட்ட ரூ.100 கோடி இலக்கிணையும் தாண்டி ரூ.163 கோடிக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நீட்ஸ் திட்டத்தில் ரூ.21 லட்சம் மானியம் பெற்று தொழில் தொடங்கிய பெண் தொழில் முனைவோரின் ப்ளூ மவுண்ட் டையக்னோஸ்டிக்ஸ் தொழிற்சாலையையும், ரூ.46 இலட்சம் மானியத்துடன் பெண் தொழில் முனைவோரால் தொடங்கப்பட்ட மகா எஞ்னியர்ஸ் தொழிற்சாலையையும், ரூ.50 லட்சம் மானியத்தில் துவங்கப்பட்ட 800 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் கே–லைட் உயர் தர மற்றும் கட்டிடக்கலை விளக்குகள் தயாரிக்கும் தொழிற்சாலையையும், ரூ.30 லட்சம் மானியத்தில் துவக்கப்பட்ட 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் எச்.பி வால்வ்ஸ் அண்ட் ஃபிட்டிங்ஸ் இந்தியா இண்டியா பிரைவேட் லிமிடெட், தொழிற்சாலையையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சிரமம் இன்றி பணியாற்றும் வகையில் வசதிகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது சுயவேலைவாய்ப்பு திட்டங்களின் கீழ் 9 பயனாளிகளுக்கு ரூ.5.40 கோடி மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவிகளை மாண்புமிகு அமைச்சர் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர், திரு. அருண்ராய், இ.ஆ.ப. ,தொழில் வணிக ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி. சிஜி தாமஸ் இ.ஆ.ப.,, சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி.மதுமதி இ.ஆ.ப., சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு.கிருஷ்ணசாமி, திரு.ஜோசப் சாமுவேல் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

.....

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in